**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# 4 நாள்கள் போர் நிறுத்தம்: இஸ்ரேல்-ஹமாஸ் முடிவு

**ஜெருசலேம், நவ.22:** போரை நான்கு நாள்கள் தற்காலிகமாக நிறுத்த இஸ்ரேல், ஹமாஸ் படையினர் இடையே புதன்கிழமை உடன்பாடு ஏற்பட்டது. இரு தரப்பினரும் கைதிகளை பரஸ்பரம் விடுவிக்கவும், காஸாவில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் கிடைக்கவும் இந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாலஸ்தீனத்தின் காஸா முனைப் பகுதியை ஆக்கிரமித்திருந்த இஸ்ரேல், கடந்த 2005-ஆம் ஆண்டு அங்கிருந்து வெளியேறியது. அதன் பின்னர், காஸாவின் ஆட்சியைக் கைப்பற்றிய ஹமாஸ் படையினருக்கும், இஸ்ரேல் படையினருக்கும் இடையே அவ்வப்போது மோதல் நடைபெற்று வந்தது.


கடந்த அக். 7-ஆம் தேதி பாலஸ்தீனத்தின் காஸா முனைப் பகுதியில் இருந்து ஹமாஸ் படையினர் இஸ்ரேல் மீது ராக்கெட்டுகளை வீசியும், எல்லை தாண்டியும் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் இஸ்ரேலைச் சேர்ந்த சுமார் 1,200 பேர் உயிரிழந்தனர். மேலும், இஸ்ரேலில் இருந்து சுமார் 240 பேரைப் பிணைக் கைதிகளாக ஹமாஸ் படையினர் பிடித்துச் சென்றனர். இதைத் தொடர்ந்து, காஸா மீது இஸ்ரேல் கடுமையான தாக்குதலில் ஈடுபட்டது.

இதுவரை இஸ்ரேல் ராணுவம் நடத்திய தாக்குதலில், 12,000-க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் உயிரிழந்தனர். 2,700 பேரைக் காணவில்லை. அவர்கள் தாக்குதலின் போது சேதமடைந்த கட்டட இடிபாடுகளில் சிக்கியிருக்கக் கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

தாக்குதலால் காஸாவின் மொத்த மக்கள்தொகையான 23 லட்சம் பேரில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள், தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறியுள்ளனர் என்று பாலஸ்தீன சுகாதாரத் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பெஞ்சமின் நெதன்யாகு



யெஹியா சின்வார்

இந்த நிலையில், இஸ்ரேல் சிறைகளில் உள்ள பாலஸ்தீன கைதிகளை விடுவித்தால், பிணைக் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யத் தயார் என்று காஸாவில் உள்ள ஹமாஸ் படையின் மூத்தத் தலைவர் யெஹியா சின்வார் தெரிவித்திருந்தார். பிணைக் கைதிகளின் குடும்ப உறுப்பினர்களும் கைதிகள் பரிமாற்றத்துக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை ஏற்கெனவே சந்தித்து ஆதரவு தெரிவித்திருந்தனர்.

இந்தச் சூழலில், போரை 4 நாள்கள் தற்காலிகமாக நிறுத்த இஸ்ரேல், ஹமாஸ் படையினர் இடையே புதன்கிழமை உடன்படிக்கை ஏற்பட்டது. இந்தப் போர் நிறுத்த உடன்படிக்கைக்கு அமெரிக்கா, கத்தார், எகிப்து ஆகிய நாடுகள் மத்தியஸ்தம் மேற்கொண்டன.

இதைத் தொடர்ந்து இஸ்ரேலில் உள்ள டெல் அவிவ் நகரில் அந்த நாட்டு அமைச்சரவைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் போர் நிறுத்த உடன்படிக்கைக்கு ஆதரவாக 35 அமைச்சர்களும், எதிராக 3 அமைச்சர்களும் வாக்களித்தனர்.

இதையடுத்து பெரும்பாலான அமைச்சர்கள் அளித்த ஆதரவை ஏற்று, தற்காலிக போர் நிறுத்த உடன்படிக்கைக்கு இஸ்ரேல் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

தங்களிடம் உள்ள பிணைக் கைதிகளில் 50 பேரை ஹமாஸ் படையினரும், அதற்கு ஈடாக தம்மிடம் உள்ள 150 பாலஸ்தீன கைதிகளை இஸ்ரேலும் விடுவிக்க வசதியாக போர் நிறுத்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**போர் நிறுத்தம் ஒவ்வொரு நாளாக நீட்டிக்கப்படும்:** இதுதொடர்பாக இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: நான்கு நாள்கள் போர் நிறுத்தத்தின்போது காஸாவில் பிணைக் கைதிகளாக உள்ள 50 பெண்கள் மற்றும் சிறார்கள் விடுவிக்கப்படுவர். அந்த நாள்களில் மோதல் நடைபெறாது. எஞ்சிய கைதிகள் பத்து, பத்து பேராக விடுவிக்கப்படும் நிலையில், போர் நிறுத்தம் ஒவ்வொரு நாளாக நீட்டிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து, இஸ்ரேலின் நீதித் துறை அமைச்சக வலைதளத்தில் 300 பாலஸ்தீன கைதிகள் பட்டியல் வெளியிடப்பட்டது. அவர்களில் முதல்கட்டமாக 150 பேர்தான் விடுதலை செய்யப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**24 மணி நேரத்தில்...:** ஹமாஸ் படையினரின் தலைமையகமாக கத்தார் தலைநகர் தோஹா உள்ளது. இந்நிலையில், கத்தார் வெளியுறவு அமைச்சகம் புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: இஸ்ரேல் சிறைகளில் உள்ள பாலஸ்தீன பெண்கள் மற்றும் சிறார்களை விடுவிப்பதற்கு ஈடாக, ஹமாஸிடம் உள்ள 50 பிணைக் கைதிகளை விடுதலை செய்ய உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது.

இந்தப் போர் நிறுத்தம் காஸாவில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் கிடைக்க வழிவகை செய்யும். அடுத்த 24 மணி நேரத்தில் போர் நிறுத்தம் தொடங்கும் நேரம் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் நிறுத்தம் தொடர்பான இஸ்ரேல் அமைச்சரவையின் முடிவைத் தொடர்ந்து, அந்த நாட்டுச் சட்டப்படி, பாலஸ்தீன கைதிகளை விடுவிப்பது தொடர்பாக இஸ்ரேல் மக்களுக்கு ஆட்சேபம் இருந்தால், அது குறித்து அவர்கள் இஸ்ரேல் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க 24 மணி நேரம் அவகாசம் அளிக்கப்படும். அந்த அவகாசம் முடியும் வரை, போர் நிறுத்த முடிவு அமல்படுத்தப்படாது என்று கூறப்படுகிறது. எனினும், அவ்வாறு எவரும் வழக்குத் தொடுக்க வாய்ப்பில்லை என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் கைதிகள் பரிமாற்றம் வியாழக்கிழமை (நவ.23) நடைபெறும் என்று இஸ்ரேல் ஊடகம் ஊகித்துள்ளது.

## ஹமாஸை ஒழிக்கும் வரை போர் தொடரும்: இஸ்ரேல் பிரதமர்

ஹமாஸை ஒழிக்கும் வரை போர் தொடரும் என்று அந்த நாட்டுப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், 'இஸ்ரேலின் தாக்குதலால் ஹமாஸ் படையினருக்கு ஏற்பட்ட அழுத்தம் காரணமாக தற்காலிக போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது. அதேவேளையில், அனைத்து பிணைக் கைதிகளையும் விடுவித்தல், ஹமாஸ் படையினரை ஒழித்தல், இனி இஸ்ரேலின் பாதுகாப்புக்கு காஸாவால் எந்த அச்சுறுத்தலும் இல்லை ஆகிய இலக்குகளை அடையும் வரை போர் தொடரும் என்று தெரிவித்தார்.

இஸ்ரேல் பாதுகாப்புத் துறை அமைச்சர் யோயாவ் காலன்ட் கூறுகையில், 'நான்கு முதல் ஐந்து நாள்கள் தற்காலிக போர் நிறுத்தம் நிறைவடைந்த பின்னர், காஸாவில் மீண்டும் முழு மூச்சாக இஸ்ரேல் தாக்குதல் நடத்தும்' என்று தெரிவித்தார்.

## அமெரிக்க அதிபர் பைடன் நன்றி



அமெரிக்க அதிபர் ஜோ பைடன் வெளியிட்ட அறிக்கையில், 'இஸ்ரேல்-ஹமாஸ் இடையே தற்காலிக போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்பட முக்கியப் பங்காற்றிய கத்தார் மன்னர் ஷேக் தமீம், எகிப்து அதிபர் எல்-சிசி ஆகியோருக்கு நன்றி.

இந்த உடன்படிக்கையை முழுமையாகப் பின்பற்ற, காஸாவில் உள்ள அப்பாவி பாலஸ்தீன குடும்பங்களின் வேதனையைத் தணிக்க கூடுதல் மனிதாபிமான உதவிகள் கிடைக்கப் போர் நிறுத்தத்தை நீட்டிக்கவும் ஆதரவு அளித்துள்ள இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு மற்றும் அவரின் அரசுக்குப் பாராட்டுகள்' என்று தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் படையினர் விடுவிக்க உள்ள பிணைக் கைதிகளில் பல அமெரிக்கர்களும் இருப்பார்கள் என்று எதிர்பார்ப்பதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

EVA STALIN IAS ACADEMY

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# இப்போதைக்கு இது சரி!

உலகப் பொருளாதாரம் தள்ளாடிக் கொண்டிருக்கும் வேளையிலும்கூட, இந்தியா ஓரளவு தாக்குப்பிடித்துக் கொண்டிருக்கிறது என்பது மிகப் பெரிய ஆறுதல். அமெரிக்கா, சீனா, ஜப்பான் உள்ளிட்ட வலிமையான பொருளாதாரங்களே விலைவாசி உயர்வையும், தட்டுப்பாடுகளையும் எதிர்கொள்ளும் சூழலில் இந்தியா விதிவிலக்காக இருந்துவிட முடியாது. சமாளித்துக் கொண்டிருக்கிறோம் என்பதேகூட சர்வதேசப் பொருளாதார நிபுணர்களை வியந்து பார்க்க வைக்கிறது.

அக்டோபர் மாதத்தின் சில்லறைப் பொருள்களின் விலை முந்தைய மாத 5.01%-லிருந்து 4.87%-ஆகக் குறைந்திருக்கிறது என்பது தேசிய புள்ளிவிவரத் துறை வெளியிட்டிருக்கும் தகவல். காய்கறிகளின் விலை குறைந்தும்கூட உணவுப் பொருள்களின் விலை 0.01% மட்டுமே குறைந்துள்ளது. கேட்பு (டிமாண்ட்) குறையும்போது பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படும். கேட்பை அதிகரிப்பதற்கு ரிசர்வ் வங்கி வட்டி விகிதத்தைக் குறைக்க வேண்டும். சர்வதேச சூழலும், உணவுப் பொருள்களின் விலை குறையாமல் இருப்பதும் வட்டி விகிதக் குறைப்பு நடவடிக்கையை எடுக்கவிடாமல் ரிசர்வ் வங்கியைத் தடுக்கின்றன.

அடுத்த சில மாதங்களில் பொதுத் தேர்தல் வரவிருக்கும் நிலையில், விலைவாசியை மேலும் அதிகரிக்கும் எந்தவொரு நடவடிக்கையையும் எடுப்பதில் நிதியமைச்சகமும், ரிசர்வ் வங்கியும் தயங்குவதைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஏற்றுமதிகள் அதிகரிப்பது பொருளாதார வளர்ச்சிக்கு அவசியம்தான் என்றாலும், உள்நாட்டுக் கேட்பு என்பது சமச்சீர் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் அவசியம். இந்தப் பின்னணியில் பொருளாதார நிபுணர்களும், நிதி நிர்வாக வல்லுநர்களும் ரிசர்வ் வங்கியின் முடிவுகளை கூர்ந்து கவனித்து வருகின்றனர்.

வங்கிகள், வங்கிசாரா நிதி நிறுவனங்களின் சில்லறை நுகர்வுப் பொருள்களின் கடன் குறித்து ரிசர்வ் வங்கி சில எச்சரிக்கைகளை விடுத்திருக்கிறது. அக்டோபர் மாத நிதிக் கொள்கை ஆய்வுக்குப் பிறகு ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்தி காந்ததாஸ், சில்லறைக் கடன்கள் வழங்குவதில் போதுமான கட்டுப்பாடுகளை விதிப்பது குறித்து வங்கிகளையும், வங்கிசாரா நிதி நிறுவனங்களையும் எச்சரித்திருக்கிறார்.

குறிப்பிட்ட சில நுகர்வோர் கடன்கள் குறித்த மத்திய வங்கியின் கவலை ஒருவகையில் நியாயமானது. கடன் வழங்குவது போலவே, கடன் வசூலில் கூடுதல் கவனம் செலுத்துவதுடன் கடன் வழங்கும்போதும் கவனம் தேவை என்கிற கருத்து நியாயமானது. அதிலும் குறிப்பாக, வங்கிகள் பாதுகாப்பில்லாத நுகர்வோர் கடன்களுக்காக வங்கிசாரா நிதி நிறுவனங்களுக்கு உதவி வழங்குவதில் ரிசர்வ் வங்கி எழுப்பியிருக்கும் அச்சத்தில் தவறுகாண முடியாது. வங்கிசாரா நிதி நிறுவனங்களின் சில்லறைக் கடன்கள் வழங்கும் அளவைக் கட்டுப்படுத்தாவிட்டால், கடன் வசூலில் தேக்கம் ஏற்பட்டு வாராக்கடன் அளவு கட்டுக்கடங்காமல் அதிகரிக்கக் கூடும்.

கடந்த சில மாதங்களாக சில்லறை தனிநபர் நுகர்வோர் கடனாளிகளுக்கும், பாதுகாப்பில்லாத சிறிய சேவை நிறுவனங்களுக்குமான கடன் வழங்குதல் அளவு அதிகரித்திருக்கிறது. அதே நேரத்தில் தொழில் நிறுவனங்களுக்கான கடன் அளவு ஆகஸ்ட் மாதத்தில் வெறும் 6% தான் அதிகரித்திருக்கிறது. பெரும்பாலான உற்பத்தித் துறைகளுக்கான கடனுதவி அதிக வளர்ச்சி காணவில்லை. இன்னொருபுறம் சிறு கடன்களின் அளவு 18% அதிகரித்திருக்கிறது. கடன் அட்டைக்கான கடன் வளர்ச்சி 30% உயர்ந்திருக்கிறது.

வங்கிகள் வழங்கியிருக்கும் மொத்த கடனுதவியில் 31%, அதாவது ரூ.48 லட்சம் கோடி தனிநபர் கடன்கள். அதில் இடர்காப்புறுதி (செக்யூரிட்டி) இல்லாத கடனின் அளவு ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு (ரூ.15 லட்சம் கோடி). தனியார் நுகர்வோர் கடன் வழங்குவதில் காணப்படும் தொழில் போட்டி காரணமாக தனிப்பட்ட கடனின் அளவு கடுமையாக அதிகரித்திருக்கிறது.

கடந்த மே மாதம் முதல் தனியார் கடன்களுக்கான வட்டி விகிதம் சந்தையில் அதிகரித்திருக்கிறது. வங்கிசாரா கடன் நிறுவனங்கள் போட்டி காரணமாக வழங்கியிருக்கும் கடன்களின் வசூல் பாதிக்கப்பட்டிருப்பதுடன், கடன் வாங்கியவர்களின் மீதான அழுத்தமும் அதிகரித்திருக்கிறது.

இந்தப் பின்னணியில் தனிநபர் கடன்களுக்கான வட்டிவிகிதத்தை அதிகரித்து இடர்காப்புறுதி இல்லாத கடன்களின் அளவைக் கட்டுப்படுத்தும் ரிசர்வ் வங்கியின் முனைப்பை புரிந்துகொள்ள முடிகிறது. அதிக லாபம் அடைவதற்காக கூடுதல் இடரை (ரிஸ்க்) எதிர்கொள்ள வங்கிசாரா நிதி நிறுவனங்கள் முனைவதைத் தடுக்க நினைக்கும் மத்திய வங்கியின் நோக்கம் சரியானது. அதே நேரத்தில், இதன் காரணமாக நுகர்வு குறைவதும், அதன் தொடர் விளைவுகள் குறித்தும் ரிசர்வ் வங்கி யோசிக்க வேண்டும்.

தனியார் முதலீடுகள் அதிகரிப்பதற்கான அறிகுறிகள் எதுவும் தெரியவில்லை. அப்படிப்பட்ட சூழலில் கடனுக்கான வட்டியை அதிகரித்து நுகர்வைக் கட்டுப்படுத்துவது இன்னொருபுறம் வளர்ச்சிக்குத் தடையாக அமையக்கூடும். அதனால் ரிசர்வ் வங்கி தனது முடிவுகளை அடிக்கடி ஆய்வு செய்வதும், அதன் அடிப்படையில் வழிகாட்டுதல்களை வழங்குவதும்தான் சரியான அணுகுமுறையாக இருக்கும்.

ஒரேயடியாக நுகர்வோருக்கான சிறுகடன்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் இன்னொருபுறம் உற்பத்தியையும் வளர்ச்சியையும் பாதிக்கும் நிலைமை ஏற்பட்டுவிடலாகாது. தங்களது பற்றாக்குறையை ஈடுகட்ட மக்களுக்கு கடன் தேவைப்படுகிறது.

வீட்டுக் கடன், வாகனக் கடன், கல்விக் கடன், சுயஉதவிக் குழுக்களுக்கான சிறு கடன்கள் உள்ளிட்ட இடர்காப்புறுதி உள்ள சில்லறைக் கடன்களுக்கு விதிவிலக்களிக்கப்பட்டிருப்பது நல்ல முடிவு.

# ஜனநாயக அச்சுறுத்தல்

**அ.அரவிந்தன்**

மகாராஷ்டிரத்தில் சிவசேனை கட்சியை இரண்டாக உடைத்துவிட்டு பாஜகவுடன் கைகோத்து ஆட்சியமைக்க உதவிய ஏக்நாத் ஷிண்டே ஆதரவு எம்எல்ஏ-க்களை தகுதிநீக்கம் செய்யுமாறு சட்டப்பேரவைத் தலைவர் ராகுல் நர்வேகரிடம் சிவசேனை (உத்தவ் தாக்கரே பிரிவினர்) அளித்த மனுவின் மீது அவர் இன்னமும் முடிவு எடுக்கவில்லை. கடந்த ஆண்டு ஜூலை முதல் இந்த மனுவை சட்டப் பேரவைத் தலைவர் ராகுல் நர்வேகர் கிடப்பில் போட்டுவிட்டார்.

இதனால் உச்சநீதிமன்றத்தின் கதவை சிவசேனை (பாலாசாஹேப் தாக்கரே) பிரிவு தட்டியது. இதை விசாரித்த உச்சநீதிமன்றம், டிசம்பர் 31-க்குள் சட்டப் பேரவைத் தலைவர் தனது முடிவை அறிவிக்க உத்தரவிட்டது.

இதனிடையே தேசியவாத காங்கிரஸ் கட்சியை உடைத்த அஜீத் பவார், தனது ஆதரவு எம்எல்ஏக்களுடன் மகாராஷ்டிர பாஜக கூட்டணி அரசில் இணைந்து துணை முதல்வர் பதவியைப் பெற்றார். எனவே, அஜீத் பவாருடன் சேர்ந்து கட்சியை உடைத்த எம்எல்ஏக்களை தகுதிநீக்கம் செய்யுமாறு முன்வைக்கப்பட்ட பரிந்துரையையும், சட்டப் பேரவைத் தலைவர் கிடப்பில் போட்டுவிட்டார்.

இதன் காரணமாக தேசியவாத காங்கிரஸும் உச்சநீதிமன்றத்தை அணுகியது. தேசியவாத காங்கிரஸின் மனு மீது ஜனவரி 31-க்குள் பேரவைத் தலைவர் முடிவெடுக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தமிழகத்திலும் அதிமுகவிலிருந்து நீக்கப்பட்ட ஓ.பன்னீர்செல்வத்துக்குப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் இருக்கை அருகே இல்லாமல், வேறு இடத்தில் இடம் ஒதுக்கக் கோரி முன்வைக்கப்பட்ட கோரிக்கையையும் பேரவைத் தலைவர் மு.அப்பாவு பரிசீலித்து முடிவு அறிவிப்பதில் காலதாமதம் நிலவுகிறது.

பேரவைத் தலைவர் பதவி என்பது இடைக்கால பிரிட்டிஷில் ஏற்படுத்தப்பட்டது. அதாவது பிரிட்டன் மன்னருடன் தங்கள் சார்பாக உரையாடுவதற்கு ஒருவர் தேவை என்பதால், பிரிட்டன் நாடாளுமன்ற கீழவை (ஹவுஸ் ஆஃப் காமன்ஸ்) உறுப்பினர்கள், தங்களுக்குள் ஒருவரை பிரதிநிதியாக தேர்ந்தெடுத்தனர்.

17-ஆம் நூற்றாண்டுவரை பேரவைத் தலைவர், மன்னரின் முகவராகவே கருதப்பட்டார். 19-ஆம் நூற்றாண்டின் மத்தியில்தான் நாடாளுமன்ற கீழவையின் பாரபட்சமற்ற தலைவராக அவர் செயல்படத் தொடங்கினார். நாடாளுமன்ற உரிமைகள், சிறப்புரிமைகள், அதன் கமிட்டிகள் மற்றும் உரிமைகளின் பாதுகாவலராக பேரவைத் தலைவர் திகழ்கிறார்.

இந்திய அரசமைப்பு சட்டத்தைப் பொருத்தவரை நாடாளுமன்றத்திலும் (அரசமைப்பு சட்டப் பிரிவு-93), மாநில சட்டப் பேரவைகளிலும் (பிரிவு-178) பேரவைத் தலைவர், துணைத் தலைவர் என தலா இருவர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பேரவை அலுவல் பணிகள் மட்டுமல்லாமல், பண மசோதாவை தீர்மானிப்பது, அரசமைப்பு சட்டத்தின் 10-ஆவது அட்டவணையின்கீழ், உறுப்பினர்களின் தகுதிநீக்கம் தொடர்பாக முடிவு எடுப்பது என இரண்டு முக்கிய அதிகாரங்களை பேரவைத் தலைவர் பெற்றுள்ளார்.

பண மசோதாவைப் பொருத்தவரை அதை மாநிலங்களவை, சட்டமேலவைகளில் தாக்கல் செய்ய இயலாது. ஆகையால், அதைத் தீர்மானித்து நிறைவேற்றுவதில் பேரவைத் தலைவரின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. இதுதவிர அவையில் உறுப்பினர்கள் ஒழுங்கீனமாக நடந்துகொண்டால், அவர்களை இடைநீக்கம் செய்யும் அதிகாரமும் பேரவைத் தலைவருக்கு உள்ளது. ஆனால், இந்த அதிகாரத்தை அவர் பெரும்பாலான நேரங்களில் முறைகேடாகப் பயன்படுத்துகிறாரோ என்ற ஐயமும் எழுகிறது.

சமீபத்தில் நடைபெற்ற மழைக்கால கூட்டத்தொடரில் பிரதமர் குறித்து விமர்சித்ததற்காக காங்கிரஸ் மக்களவைக் குழு தலைவர் அதீர் ரஞ்சன் சௌதரி இடைநீக்கம் செய்யப்பட்டது அதிர்வலையை ஏற்படுத்தியது. இதே கூட்டத்தொடரில் பகுஜன் சமாஜ் கட்சி எம்.பி. டேனிஷ் அலியை பாஜக எம்.பி. ரமேஷ் பிதுரி சர்ச்சைக்குரிய வகையில் பேசியது தேசிய அளவில் பேசுபொருளானது. ஆனால், அவர் மீது கடும் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் மசோதாக்களை நிலைக் குழுவுக்குப் பரிந்துரை செய்யும் அதிகாரம் அவைத் தலைவருக்கு உள்ளது. ஆனால், நிலைக்குழுவின் பரிசீலனை தேவைப்படும் முக்கியத்துவம் வாய்ந்த பல மசோதாக்கள், அக்குழுவைச் சென்றடைவதில்லை.

அரசமைப்பு சட்டத்தின் 10-ஆவது அட்டவணையின்கீழ், உறுப்பினர்களைத் தகுதிநீக்கம் செய்யும் அதிகாரம் அவைத் தலைவருக்கு உள்ளது. இந்த விவகாரத்தில் உச்சநீதிமன்றம் அண்மையில் ஒரு யோசனையை முன்வைத்தது.

அதாவது கெய்ஷம் மேகச்சந்திர சிங் (எதிர்) மணிப்பூர் பேரவைத் தலைவர் வழக்கு விசாரணையின்போது, உறுப்பினர்களைத் தகுதிநீக்கம் செய்யும் அதிகாரத்தை அவைத் தலைவரிடம் இல்லாமல், நீதிபதி தலைமை வகிக்கும் சுதந்திரமான அமைப்பிடம் வழங்கலாம் என உச்சநீதிமன்றம் பரிந்துரை செய்திருந்தது.

நாடாளுமன்றத்தில் சில மசோதாக்களை பண மசோதாவாக அவைத் தலைவர் சான்றளித்ததை எதிர்த்தும் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன. பேரவைத் தலைவர் பதவி தொடங்கப்பட்ட பிரிட்டனில், ஒருவர் அப்பதவிக்கு வந்ததும் சம்பந்தப்பட்ட கட்சியிலிருந்து விலகிவிடுவார். அதுமுதல் அவர் பொதுவான நபராகவே அறியப்படுவார்.

இந்திய அரசமைப்புசட்டத்தின் 10-ஆவது அட்டவணையிலும் பேரவைத் தலைவர், துணைத் தலைவர் அந்தப் பொறுப்புக்கு வந்ததும் கட்சியிலிருந்து விலக வழிவகை செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், அது வெறும் ஏட்டளவிலேயே உள்ளது.

தொடர்ந்து நடைபெறும் தேர்தல்களில் அரசியல் கட்சியின் வேட்பாளராக இல்லாமல், ஓர் அவைத் தலைவர் என்ற முறையிலேயே வாக்கு சேகரிக்கிறார். சுதந்திர இந்தியாவின் ஆரம்ப காலங்களில், அவருக்கு எதிராகக் கட்சிகள் வேட்பாளர்களை நிறுத்துவதில்லை என்கிற மரபு பின்பற்றப்பட்டது.

அவைத் தலைவர்கள், நடுநிலை வகிப்பவர்களாக இல்லாமல் ஆட்சியில் உள்ள அரசியல் கட்சியின் பிரதிநிதிகளாக செயல்படுவது என்பது வழக்கமாகவே மாறிவிட்டிருக்கிறது. இந்திய ஜனநாயகம் எதிர்கொள்ளும் பல்வேறு அச்சுறுத்தல்களில் இதுவும் ஒன்று.

# இஸ்ரேல்–ஹமாஸ் போர் அண்டை நாடுகளுக்கு பரவிவிடக் கூடாது

**பிரதமர் மோடி**



ஜி20 கூட்டத்தில் காணொலி வாயிலாக உரையாற்றிய பிரதமர் மோடி

**புது தில்லி, நவ. 22:** இஸ்ரேல்-ஹமாஸ் போர் அண்டை நாடுகளுக்கு பரவிவிடக் கூடாது என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

இந்தியாவின் ஜி20 தலைமைப் பொறுப்பு வரும் 30-ஆம் தேதி முறைப்படி நிறைவடையவுள்ளது. இதையொட்டி, இந்தியா சார்பில் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் மாநாடு காணொலி முறையில் புதன்கிழமை நடத்தப்பட்டது.

ரஷிய அதிபர் விளாதிமீர் புதின், ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, பிரேசில் அதிபர் லூயிஸ் லூலா டசில்வா, வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா, சர்வதேச நிதியத்தின் மேலாண் இயக்குநர் கிறிஸ்டலினா ஜார்ஜிவா உள்ளிட்டோர் பங்கேற்ற இக்கூட்டத்தில் பிரதமர் மோடி ஆற்றிய தொடக்க உரை வருமாறு: மேற்கு ஆசியாவில் நிலவும் பாதுகாப்பற்ற, ஸ்திரமற்ற சூழல் கவலையளிக்கிறது.

இந்தச் சூழல் காரணமாக புதிய சவால்கள் எழுந்துள்ளன. பயங்கரவாதம் எவருக்கும் ஏற்புடையதல்ல; அதேபோல், பொது மக்களின் உயிரிழப்பு நடவடிக்கைகள் கண்டனத்துக்குரியவை.

நாம் இப்போது ஒன்றுகூடியிருப்பது, அனைத்துப் பிரச்னைகள் மீதான நமது அக்கறையையும் அப்பிரச்னைகளின் தீர்வுக்காக நாம் ஒருங்கிணைந்து பணியாற்றுவதையும் வெளிப்படுத்துகிறது.

இஸ்ரேல்-ஹமாஸ் போர் பிராந்திய மோதலாக உருவெடுக்காமல் இருப்பதை உறுதி செய்வது மிக முக்கியம். மனிதாபிமான உதவிகள் உரிய நேரத்திலும் தொடர்ந்தும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

அங்கு பிணைக் கைதிகள் விடுவிக்கப்படுவது தொடர்பாக செய்திகள் கிடைக்கப் பெறுகின்றன. இது வரவேற்புக்குரியது. அனைத்து பிணைக் கைதிகளும் விரைவில் விடுவிக்கப்படுவர் என்ற நம்பிக்கை உள்ளது.

**'ஒன்றாக சாதித்தோம்':** இந்தோனேசிய அதிபர் ஜோகோ விடோடோவிடம் இருந்து கடந்த ஆண்டு நவம்பர் 16-ஆம் தேதி ஜி20 தலைமைப் பொறுப்பை ஏற்றபோது, இக்கூட்டமைப்பை அனைவரையும் உள்ளடக்கிய, இலக்கு நிறைந்த, செயல் அடிப்படையிலான, தீர்க்கமான அமைப்பாக மாற்றுவேன் என்று குறிப்பிட்டிருந்தேன். இதை ஓராண்டில் நாம் அனைவரும் ஒன்றாகச் சாதித்துள்ளோம்.

நாம் ஜி20 கூட்டமைப்பை புதிய உச்சங்களுக்கு இட்டுச் சென்றுள்ளோம். அவநம்பிக்கைகளும் சவால்களும் சூழ்ந்த இந்த உலகில், உறுதியான நம்பிக்கையே நம்மைப் பிணைத்துள்ளது. கடந்த ஓராண்டில் 'ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்' என்பதில் நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளோம்.

சர்ச்சைகளில் இருந்து விலகி, ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பு சார்ந்து பணியாற்றியுள்ளோம். இந்தியத் தலைமையின்கீழ் ஜி20 கூட்டமைப்பில் ஆப்பிரிக்க ஒன்றியம் இணைக்கப்பட்டதை ஒருபோதும் மறக்க முடியாது; இது இந்தியாவுக்கு பெருமை.

ஜி20 இந்தியத் தலைமையில் தெற்குலகின் குரல் வலுவாக எதிரொலித்தது. அத்துடன், உலகளாவிய நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் பன்முகத்தன்மை மீதான நம்பிக்கையை அதிகரித்து, புதிய பாதையை நாம் காட்டியுள்ளோம் என்றார் பிரதமர் மோடி.

## செயற்கை நுண்ணறிவுக்கு உலகளாவிய ஒழுங்குமுறை: பிரதமர் மோடி

**புது தில்லி, நவ. 22:** செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் எதிர்மறை விளைவுகள் கவலையளிப்பதால் உலகளாவிய ஒழுங்குமுறைகளை வகுக்க அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடி புதன்கிழமை வலியுறுத்தினார்.

இதுகுறித்து ஜி20 கூட்டத்தில் பிரதமர் ஆற்றிய உரையில், 'செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பத்தின் எதிர்மறை பயன்பாடுகள் தொடர்பாக சர்வதேச அளவில் கவலை எழுந்துள்ளது. எனவே, இந்தத் தொழில்நுட்பத்துக்கான உலகளாவிய ஒழுங்குமுறைகளை வகுக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் உருவாக்கப்படும் டீப் ஃபேக் (போலி சித்தரிப்பு) புகைப்படங்கள், விடியோக்கள் சமூகத்துக்கும் தனிநபர்களுக்கும் எவ்வளவு ஆபத்தை உருவாக்குகின்றன என்பதை உணர்ந்து நாம் செயலாற்ற வேண்டும்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மக்களை சென்றடையும் அதேவேளையில், சமூகத்துக்கு அது பாதுகாப்பானதாக இருக்க வேண்டும்' என்று வலியுறுத்தினார்.

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

## தேசிய ஆடவர் ஹாக்கி: குஜராத்தை வீழ்த்தியது சத்தீஸ்கர்



சத்தீஸ்கர் - குஜராத் ஆட்டம்.

**சென்னை, நவ. 22:** பதிமூன்றாவது தேசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஷிப்பில் புதன்கிழமை ஆட்டத்தில் சத்தீஸ்கர் அணி 11-3 என்ற கோல் கணக்கில் குஜராத் அணியை வீழ்த்தியது.

இரு அணிகளும் இதுவரை 2 ஆட்டங்களில் விளையாடியிருக்கும் நிலையில், சத்தீஸ்கருக்கு இது முதல் வெற்றி; குஜராத்துக்கு இது 2-ஆவது தோல்வி.

போட்டியின் 6-ஆவது நாளான புதன்கிழமை, எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி மைதானத்தில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் சத்தீஸ்கர் தரப்பில் சுக்தேவ் நிர்மால்கர் (4', 49'), ஜுனைத் அகமது (8', 34', 39'), கோகேஷ்வர் பாக் (9', 36'), அலி அர்பாஜ் (20'), அஜய் தண்டி (25'), தௌஃபிக் அகமது (38'), ரோஹித் ரஜக் (60') ஆகியோர் கோலடித்தனர். குஜராத் தரப்பில் ஷுபம் யாதவ் (1'), ஜெனிஷ்குமார் அஹிர் (11'), அஜய்குமார் தகோர் (41') ஸ்கோர் செய்தனர்.

இதர ஆட்டங்களில் தாத்ரா & நாகர் ஹவேலி 7-1 கோல் கணக்கில் பிகாரையும், பெங்கால் அணி 10-0 கோல் கணக்கில் ஜம்மு & காஷ்மீரையும், ஜார்க்கண்ட் 2-0 கோல் கணக்கில் சண்டீகரையும், தெலங்கானா 15-0 கோல் கணக்கில் அருணாசல பிரதேசத்தையும் வென்றன.

7-ஆம் நாளான வியாழக்கிழமை ஆட்டங்களில், மகாராஷ்டிரம் - திரிபுரா, பெங்கால் - மணிப்பூர், ஜம்மு&காஷ்மீர் - மத்திய பிரதேசம், ஜார்க்கண்ட் - கோவா, ஆந்திர பிரதேசம் - சண்டீகர் அணிகள் மோதுகின்றன.





## ஆசிய பாரா வில்வித்தை சாம்பியன்ஷிப்: 9 பதக்கங்களுடன் இந்தியா முதலிடம்

**பாங்காக், நவ. 22:** தாய்லாந்தில் நடைபெற்ற ஆசிய பாரா வில்வித்தை சாம்பியன்ஷிப்பில் இந்தியாவுக்கு புதன்கிழமை ஒரே நாளில் 4 தங்கம், 4 வெள்ளி என 8 பதக்கங்கள் கிடைத்தன.

இத்துடன், கடந்த 20-ஆம் தேதி சரிதா தேவி வென்ற வெண்கலமும் சேர்த்து மொத்தமாக 9 பதக்கங்களுடன் முதலிடம் பிடித்து போட்டியை நிறைவு செய்தது இந்தியா. தென் கொரியா 3 தங்கம், 1 வெள்ளி, 1 வெண்கலம் என 5 பதக்கங்களுடன் 2-ஆம் இடம் பிடித்தது.

போட்டியின் கடைசி நாளான புதன்கிழமை, உலகின் 5-ஆம் நிலை வீரரான ராகேஷ் குமார் 3 பிரிவுகளில் தங்கப்பதக்கம் வென்று அசத்தினார். காம்பவுண்ட் ஆடவர் பிரிவில் அவர் 145-144 என்ற புள்ளிகள் கணக்கில் இந்தோனேசியாவின் கென் ஸ்வாகுமிலாங்கை வீழ்த்தி தங்கத்தை தனதாக்கினார். அதிலேயே ஆடவர் ஓபன் அணிகள் பிரிவில் ராகேஷ் குமார், சூரஜ் சிங் கூட்டணி 147-144 என்ற புள்ளிகளுடன் சீன தைபேவின் கங் ஹங் வு, சிஹ் சியாங் சிங் இணையை வீழ்த்தி முதலிடம் பிடித்தது.



ஹர்விந்தர் சிங், விவேக் சிகாரா

பின்னர் காம்பவுண்ட் கலப்பு அணிகள் பிரிவில் ராகேஷ் குமார்/ஷீத்தல் தேவி இணை 154-149 என்ற புள்ளிகள் கணக்கில் இந்தோனேசியாவின் தியோதரா ஆடி அயுடியா/கென் ஸ்வாகுமிலாங் கூட்டணியை வென்று தங்கப் பதக்கத்தை கைப்பற்றியது. காம்பவுண்ட் மகளிர் அணிகள் பிரிவில் ஷீத்தல் தேவி, ஜோதி இணை 148-137 என்ற கணக்கில் தென் கொரியாவின் ஜின் யங் ஜியோங்/நா மி சோம் ஜோடியை வீழ்த்தி முதலிடம் பிடித்தது.



ஜோதி, ஷீத்தல், பூஜா

எனினும், ரீகர்வ் மகளிர் ஓபன் அணிகள் பிரிவில் பூஜா, பூஜா இணை இந்தோனேசியாவிடம் டை பிரேக்கரில் 4-5 என தோல்வி கண்டு வெள்ளிப் பதக்கம் பெற்றது. ரீகர்வ் ஆடவர் இரட்டையர் பிரிவில் ஹர்விந்தர் சிங், விவேக் சிகாரா கூட்டணி 2-6 என தென் கொரியாவிடம் தோல்வி கண்டு வெள்ளி பெற, அதிலேயே டபிள்யு1 பிரிவில் ஆதில், நவீன் கூட்டணி 122-137 என தென் கொரியாவிடம் வெற்றியை இழந்து 2-ஆம் இடம் பிடித்தது.

மகளிர் ஒற்றையரில் ஷீத்தல் தேவி - சிங்கப்பூரின் நூர் சியஹிதா அலிம் மோதல் 142-142 என 'டை'யில் முடிய, பின்னர் நடைபெற்ற ஷூட் ஆஃபில் ஷீத்தலுக்கு வெள்ளி கிடைத்தது.

### துளிகள்...

- கடந்த இரு சீசன்களாக லக்னௌ சூப்பர் ஜயன்ட்ஸ் ஆலோசகராக இருந்த கௌதம் கம்பீர், மீண்டும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் ஆலோசகராக புதன்கிழமை நியமிக்கப்பட்டார்.
- டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியில் நடப்பு சாம்பியனான கனடாவை வீழ்த்தி, ஃபின்லாந்து முதல் முறையாக அரையிறுதிக்குத் தகுதிபெற்றது.
- ஃபிஃபா உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் தென்னமெரிக்க பிரிவு தகுதிச்சுற்றில் ஆர்ஜென்டீனா 1-0 கோல் கணக்கில் பிரேஸிலை அதன் சொந்த மண்ணில் புதன்கிழமை சாய்த்தது.
- பருவமடைந்த பிறகு பாலின மாற்று அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட ஆடவர்கள், மகளிர் அணியில் சேர்க்கப்படமாட்டார்கள் என ஐசிசி புதிய விதியை கொண்டுவந்ததை அடுத்து, உலகின் முதல் திருநங்கை சர்வதேச கிரிக்கெட்டரான டேனியல் மெக்கே (கனடா) கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றார்.
- ஐசிசி ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் பேட்டர்கள் பிரிவில் விராட் கோலி, ரோஹித் சர்மா ஆகியோர் தலா ஓரிடம் முன்னேறி முறையே 3 மற்றும் 4-ஆம் இடத்துக்கு வந்துள்ளனர்.
- தோஹாவில் நடைபெறும் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் ஃபைனல்ஸ் போட்டியில் இந்தியாவின் ஹிருதய் ஹஸாரிகா, இளவேனில் வாலறிவன், ருத்ராங்ஷ் பாட்டீல் உள்ளிட்ட அனைவரும் பதக்கம் பெறாமல் ஏமாற்றத்தை சந்தித்தனர்.

## அமெரிக்காவில் சட்டவிரோத குடியேற்றம் | இந்தியர்கள் 3-ஆவது இடம்









| | |
|---|---|
| எல் சால்வடார் | 8 லட்சம் பேர் |
| இந்தியா | 7.25 லட்சம் பேர் |
| கௌதமாலா | 7 லட்சம் பேர் |
| ஹோண்டுராஸ் | 5.25 லட்சம் பேர் |

**வாஷிங்டன், நவ22:** கடந்த 2021-ஆம் ஆண்டு புள்ளிவிவரங்களின் படி, அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறிய நாட்டவர்களில் இந்தியர்கள் மூன்றாவது இடத்தில் உள்ளனர்.

இதுதொடர்பாக அமெரிக்காவின் வாஷிங்டனில் உள்ள 'ப்யூ' ஆய்வு மையம் தெரிவித்துள்ளதாவது:

2019-ஆம் ஆண்டு அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களின் எண்ணிக்கை 1.02 கோடியை எட்டியது. இது 2021-ஆம் ஆண்டு 1.05 கோடியாக அதிகரித்தது.

2021-ஆம் ஆண்டு அமெரிக்க மக்கள்தொகையில் 14.1 சதவீதம் பேர் வெளிநாட்டவர்கள். இதில் சட்டவிரோதமாக குடியேறிய 1.05 கோடி பேர் என்பது அந்நாட்டின் மொத்த மக்கள்தொகையில் சுமார் 3 சதவீதமாகவும், மொத்த வெளிநாட்டவர்கள் எண்ணிக்கையில் 22 சதவீதமாகவும் உள்ளது.

அதேவேளையில், அந்நாட்டில் சட்டப்படி குடியேறியவர்களின் எண்ணிக்கை 80 லட்சத்துக்கும் அதிகமாக 29 சதவீதம் அதிகரித்துள்ளது.

2021-ஆம் ஆண்டு புள்ளிவிவரங்களின்படி, அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களில் மெக்ஸிகோ நாட்டைச் சேர்ந்தவர்கள் முதலிடத்தில் உள்ளனர். இரண்டாவது இடத்தில் எல் சால்வடார் நாட்டைச் சேர்ந்தவர்களும், மூன்றாவது இடத்தில் இந்தியர்களும் உள்ளனர்.

2007 முதல் 2021-ஆம் ஆண்டு வரை, கிட்டத்தட்ட உலகின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது. அதிகபட்சமாக கோஸ்டா ரிக்கா, எல் சால்வடார், கௌதமாலா, ஹோண்டுராஸ் உள்ளிட்ட நாடுகளில் இருந்து 2.40 லட்சம் பேர், தெற்கு மற்றும் கிழக்கு ஆசியாவில் இருந்து 1.80 லட்சம் பேர் சட்டவிரோதமாக குடியேறியுள்ளனர்.